செய்தார்! என்று சொன்னார்கள். திருமணம் முடித்து அன்று இரவு வந்த வெகுமதிகளை எல்லாம் பிரித்து என் பெரியம்மா திருமதி. சந்திரா பர்னபாஸ் மற்றும் அன்பு சகோதரர் மகிமைதாசும் எண்ணினார்கள். தம்பி மகிமைதாஸ் என்னை அழைத்து, அக்கா கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லுங்கள். அநேகமாக உங்கள் கடன் எல்லாம் கொடுத்து விடுவீர்கள் என்று நினைக்கிறேன் என்றார். அங்கேயே தேவனுக்கு நாங்கள் ஸ்தோத்திரம் செலுத்தினோம். அற்புதம் என்ன வென்றால், சீர் வரிசையுடன் என் கடைசி தங்கை சில்வியாவுக்கு ஊசி, நூல் முதற்கொண்டு புதியதாக கொடுக்க உதவி செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இதை வாசிக்கும்போதே, உங்கள் பிள்ளைகள் திருமணத்தை கர்த்தர் உதவியோடு முடிக்கும் ஒரு விசுவாசம் உங்களுக்குள் வரும் என்று நம்புகிறேன்.

ஒவ்வொரு மாதமும் எங்களுக்கு மொழிபெயர்ப்பை மனமுவந்து செய்து கொடுக்கும் எங்கள் அன்பு சகோதரி Dr. Jannet அவர்களுக்கும், அவர்கள் மகன் Mr. Daniel அவர்களுக்கும் எங்கள் வாழ்த்துதலையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**BOOK POST**

**To**

If Undelivered Please Return To:
**Miracle Ministry**
Door No-470, Block No-11
Pachaiyappar Road
Mogappair East, Chennai - 600 037



MIRACLE MINISTRY
அற்புத ஊழியம்
PREACH PREPARE
MIRACLE MINISTRY INTERNATIONAL
Editor: Sis. SHANTHI SOLOMON
December - 2021 & January 2022

## டிசம்பர் 2021 - வாக்குத்தத்தம்

**"எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு, ஆண்டவரின் சமூகத்தில் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு"** (புலம்பல் 2:19).

அன்பு வாசகர்களுக்கு,

அன்பின் வாழ்த்துக்கள்!

வருடக் கடைசி நாட்களில் வந்திருக்கும் என் அன்பு அற்புத ஊழிய வாசகர்களே, உங்களைப் பார்த்து காத்தர் இம்மாதத்தில் கொடுக்கும் வார்த்தை எழுந்திரு! வருட கடைசியில் நம்மை தேவன் உற்சாகப் படுத்துகிறார். முதற்சாமத்தில் கூப்பிடு. உன் துக்கங்களையும், வேதனைகளையும் மறந்து என்னை நோக்கிக் கூப்பிடு. கூப்பிடுவது மட்டுமல்ல, உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு என்கிறார். உங்களை இவ்வசனத்தின் மூலம் உற்சாகப் படுத்துகிறேன். அனுபவப்பூர்வமாக இவ்வசனத்தை உங்களுக்கு தருகிறேன். அனுதினமும் கண்ணீர் விட்டு, கதறி தேவ சமூகத்தில் அழுதுதான் நான் பிழைத்திருக்கிறேன். இவ்வசனத்தின்படி நடக்கும் யாவரையும் என் தேவன் நடத்துவார்! வரப்போகும் புதிய வருடத்தில், புது பொலிவையும், ஆசீர்வாதத்தையும், ஐஸ்வரியத்தையும் தேவன் அருள, நாம் நம் கஷ்டங்களை மறந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, விண்ணப்பித்து, அன்னாளைப் போன்று அவர் பாதத்தில் கண்ணீர் விட்டு ஜெபிப்போம். நிச்சயம் புது வருடத்தில் வெற்றி வாகை சூடுவோம்!

Sis. சாந்தி சாலமோன்

WE WISH YOU

ALL A

BLESSED CHRISTMAS &

A PROSPEROUS

# NEW YEAR 2022

Sis. SHANTHI SOLOMON &

FAMILY,

TRUSTEES, AUDITORS,

COUNCIL MEMBERS,

STAFF OF THE

MIRACLE MINISTRY INTERNATIONAL &

SHALOM TOWN

(Lepers' families/inmates)



# 2022 புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டம்

இடம்: ஆசீர்வாத ஆராதனை மையம்

**Blessing Worship Centre**

(Behind M.R. Hospital & Near Sky Walk)

ஜெயம்மாள் தெரு, அமைந்தக்கரை, சென்னை-23



நாள்: 1-1-2022

மாலை 6-00 மணிக்கு

செய்தியாளர்:

சகோதரி **சாந்தி சாலமோன்**

**Praise & Worship:**

சகோதரி **ஷீபா ஜேபஸ்** &

அற்புத ஊழியம் பாடகர் குழுவினர்

சிறப்பு பாடல்: **ஜெய்ரஸ் சாமுவேல்**

**Contace: Miracle Ministry**

**Phone 044 48678077, 9940271077**

இக் கூட்டத்தில் அனைவரும் கலந்துக்கொண்டு தேவாசீர்வாதம் பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கிறோம்

# “பயப்படாதேயுங்கள்: எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷம்! ஏரோதுக்கு மிகுந்த கலக்கம்.”

**“...கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது: அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள்: இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்”** லூக். 2:9,10.

தேவ தூதன் வந்ததினால் கர்த்தருடைய மகிமை பிரகாசித்தது. அதைக் கண்ட மேய்ப்பர்கள் பயந்தார்கள், பயந்தவர்களைப் பார்த்து பயப்படாதீர்கள் என்றான் தேவதூதன்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பயந்து நடுங்கிக் கொண்டிருப்பவர் களின் பயத்தை நீக்கும் ஓர் அருமருந்து. இது எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்காது. ஆனால், தேவன் அருளும் சந்தோஷம் பரலோகத்திலிருந்து மாத்திரமே வரும் ஒளஷதம்!

**சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி:**

செய்திகளில் பலவகை உண்டு. அரசியல் செய்தி, வணிகச் செய்தி, வானிலைச் செய்தி, துக்கச் செய்தி என்று பலச் செய்திகளை செய்தித்தாளிலும், வானொலியிலும், தொலைக் காட்சியிலும், அதிலும் தற்போது YouTube போன்ற எத்தனையோ விதங்களிலும் பார்க்கிறோம். அதில் நிஜச் செய்திகளும் வரும். போலிச் செய்திகளும் வரும். நடக்கும் என்பார்கள் நடக்காது, நடக்காது என்பார்கள் நடக்கும். அனைததுச் செய்திகளும், வேதனையையும், துக்கத்தையும், மனச்சோர்வையும், பயத்தையும் கொடுக்கும் செய்திகள்தான். ஆனால், இயேசு கிறிஸ்து கொண்டு வந்ததுதான் நற்செய்தி! அது பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்த விண் செய்தி!! நிஜச் செய்தி!!! என்று சொல்லும்படி விரும்புகிறேன்.

நாம் யுத்தம், கலகம், கொலை, கொள்ளை போன்ற துர்ச்செய்திகளைத் தான் அனுதினமும் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். இயேசுவின் பிறப்பு மட்டுமே நற்செய்தி! உலக நாயகனின் பிறந்த நற்செய்தி! ஆரம்பிக்கவிருக்கும் புதிய வருடம் - 2022 முழுவதும் நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் நற்செய்தியை மட்டுமே



கேள்விப்பட வேண்டும் என்று ஜெபிக்கிறேன். வேதம் கூறுகிறது பழையவைகள் ஒழிந்துப் போயின எல்லாம் புதியதாயின என்று வேதம் கூறுகிறது.

Don't give up - Your Miracle is on the way - Keep on praising Jesus!

**சோர்ந்து போகாதீர்கள் - விட்டு விடாதீர்கள் - எப்பொழுதும் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்!**

இவ்வருடக் கடைசியான டிசம்பர் மாதத்தில் வந்துள்ள நாம் அனைவரும் எதைக் கண்டும் பயப்படாமல், சோர்ந்து போகாமல், பின் வாங்காமல், நம் தெய்வமாகிய இயேசுவை - பாலகனாய் பிறந்த இயேசுவை எப்பொழுதும் ஸ்தோத்தரிப்போம்!

**எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷம்:**

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து கேள்விபட்ட மேய்ப்பர்களுக்கு சந்தோஷம்; கீழ்த்திசை ஞானிகளுக்கு மிகுந்த சந்தோஷம்; சிமியோனுக்கும் சந்தோஷம். இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து கேள்விபட்ட நல்லெண்ணம் படைத்த அனைவருக்கும் இச்செய்தி சந்தோஷத்தை கொடுப்பதாக இருந்தது. ஆனால், ஏரோதுக்கு மாத்திரம் இச்செய்தி கலக்கத்தை உண்டாக்கியது. காரணம், அவன் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ள மனமில்லாதவனாய் இருந்தான். எனவே, இயேசு கிறிஸ்து அருள வந்த இரட்சிப்பும், மெய் சந்தோஷமும் அவனுக்கு கிடைக்காமல் போய்விட்டது. ஆண்டவர் அருளும் மெய் சந்தோஷம் அனைத்து உலக மக்களுக்கும் உரியது. அப்போஸ்தர் 10:34-ல் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்று வேதம் கூறுகிறது. எனவே, இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்பட்ட இரட்சிப்பும், மெய் சந்தோஷமும் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் உரியது. அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் நம்மிடம்தான் உள்ளது. இயேசு கிறிஸ்துவை ஏரோதுவைப் போல் நிராகரிக்காமல், நம் வாழ்வில் ஏற்றுக் கொண்டு, வரப்போகும் புது வருடத்திலும் அவரை அதிகமாகப் பற்றிக் கொண்டு ஜீவித்து வாழ்வில் மாபெரும் அற்புதங்களையும், அதிசயங்களையும், ஜீவனையும் பெற்று வாழ ஆசித்து, என் செய்தியை முடிக்கிறேன். கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

அற்புதப் பணியில்
சகோதரி சாந்தி சாலமோன்

அற்புத ஊழியம் வாசகர்களிடமிருந்து அற்புத ஊழியம் அலுவலகத்திற்கு கடிதங்கள் வந்துக் கொண்டிருக்கிறது. அற்புத ஊழியம் பத்திரிகை, தொலைக்காட்சி, YouTube, Face Book போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களையும், அற்புதங்களையும் எங்களுக்கு எழுத மறவாதீர்கள்.

நிர்வாகி




## Dr. ஜான் சாலமோன் அவர்கள்
### மகிமைக்குள் பிரவேசித்த நாள் (17-12-2019)

கர்த்தருக்குள் பிரியமான அன்பு வாசகர்களே, உங்கள் யாவரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன்!

2019 டிசம்பர் 17-ஆம் நாள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத துயரமான ஓர் நாள். என் அன்பு அப்பா Dr. ஜான் சாலமோன் அவர்கள் மகிமைக்குள் பிரவேசித்த நாள். இப்பொழுதும் அந்த நாளை நினைத்தால், என் உள்ளம் உடைகிறது. என் மேல் மிகவும் பிரியம் வைத்து, பாசத்தைக் கொட்டி, அதிகமாக செல்லம் கொடுத்து, என்னை வளர்த்தார்.

தன் கடைசி நாட்களில் என்ன சாட்பிட ஆசைப்படுகிறீர்கள் என்று கேட்ட போது, என் மகள் ஷீபா சமைக்கும் கேரள மத்திப்பீராவும், காய்ச்சிய மோரும்தான் நான் சாப்பிட விரும்புகிறேன் என்று சொல்லிவிட்டு, என் கையால் சமைத்ததை சாப்பிடாமலே என் அப்பா என்னை விட்டுப் சென்று விட்டார். அப்பாவைப் பற்றி நினைக்காத நாளில்லை, நேரமில்லை. ஒருவராலும் மறக்க முடியாத ஓர் அன்பின் சிகரம் என் அப்பா Dr. ஜான் சாலமோன்! ஒவ்வொரு இரவும் அப்பாவின் நினைவுகளால் என் தலையனையை கண்ணீரால் நனைத்துக் கொண்டிருக்கிறேன்.

MMM Hospital ICU-வில் Ventilator-இல் இருந்த போது, அப்பா என்று நான் கடைசியாக அவரைக் கூப்பிட்டபோது, அந்த நிலையிலும் தன் கண்களைத் திறந்துப் பார்த்தார். சுற்றி இருந்த மருத்துவர்கள் அனைவரும் ஆச்சரியப் பட்டார்கள்! நான் என் அப்பாவிடம் பேசின கடைசி வார்த்தைகள், ஷீபா என்றால், உங்களுக்கு அவ்வளவுப் பிடிக்குமா அப்பா என்று கேட்டதற்குத் தன் தலையை அசைத்து ஆம் என்றார்.

அவர் எங்களை விட்டுச் சென்று இரண்டு வருடங்கள் முடிகிறது என்று நினைத்தாலே வேதனையாக இருக்கிறது. சங்கீதம் 68:5-ன்படி திக்கற்ற (தகப்பனற்ற) பிள்ளைகளுக்கு என்று எழுதி இருக்கிறபடி, என் பரலோகத் தகப்பன் என்னை இந்த இரண்டு வருடங்களாக ஆச்சரியமாக வழிநடத்தியும், போஷித்தும் வருகிறார்! ஓ! அவர் நாமத்திற்கு எப்போதும் துதி, கன, மகிமை உண்டாவதாக!!

என் அமமா Mrs. சாந்தி சாலமோன் அவர்களுக்காகவும், எனக்காகவும், அற்புத ஊழியததிற்காகவும் எப்போதும் மறவாமல் ஜெபிக்கின்ற, தாங்குகின்ற உங்களை என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

என் அப்பா Dr. ஜான் சாலமோன் அவர்கள் விட்டுச் சென்ற இந்த பிரமாண்டமான நற்பணியைத் தொடர்ந்து நாங்கள் செய்ய, தேவன் எங்களுக்கு பெலன் அளிக்கவும், அபிஷேகத்தை பெருகச் செய்யவும் தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**In His Service,**
**Sheba Jabez**



# உங்கள் கவனத்திற்கு

இப்பத்திரிகை தமிழ், ஆங்கிலம் ஆகிய 2 மொழிகளில் தனித் தனியே வெளியிடப்படுகிறது. அற்புத ஊழியத்திற்கு சந்தா (அல்லது) காணிக்கை அனுப்ப விரும்புவோர் மணியார்டர் (Money Order) அல்லது காசோலை மூலமாகக் (Cheque or Draft) கீழ்க்காணும் பெயர்களுக்கு அனுப்பவும். Bank Transfer மூலம் அனுப்ப விரும்புவோரும் கீழ்க்கண்ட விவரங்களின்படி அனுப்பலாம். அனுப்பினப் பின்னர், உங்கள் பெயர், விலாசம் மற்றும் E-mail ID-யையும் தயவு செய்து எங்களுக்கு மறவாமல் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கவும், கடிதம் அனுப்பவும் எங்களுக்கு உதவியாக இருக்கும்.

கடந்தப் பல வருடங்களாக உதாரத்துவமான காணிக்கை களினால் இவ்வூழியத்தைத் தாங்கி வந்த உங்களுக்கு என் இதயப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இவ்வூழியத்தை உங்கள் காணிக்கைகளினாலும், ஜெபங்களினாலும் தாங்குமாறு இச்சந்தர்ப்பத்தில் உங்களை மிகுந்த அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தனிப்பிரதி: ரூ.10/-    ஆண்டு சந்தா ரூ.100/-

**வங்கிக் கணக்குகளின் பெயர்கள்:**

Miracle Ministry : A/c. No.0974101019647
Shanthi Solomon : A/c. No. 0974101034594
வங்கியின் பெயர் : Canara Bank
கிளை : Anna Nagar East, Chennai 600102
IFSC CODE : CNRB0000974
MICR CODE : 600015005

Shanthi Solomon : A/c. No. 40012869208
வங்கியின் பெயர் : State Bank of India
கிளை : Purasawalkam, Chennai-7
IFSC CODE : SBIN0001515
MICR CODE : 600002041
Google-Pay : 6379114745


**அற்புத ஊழியம்**
470, 11-வது பிளாக், பச்சையப்பர் சாலை,
முகப்பேர் கிழக்கு, சென்னை 600037.
044 4867 8077    9940271077

# நான் கடந்து வந்தப் பாதைகள்
## (**Sis.** சாந்தி சாலமோன்)

என் அன்பு வாசகர்களுக்கு - அன்பின் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் என் தங்கைமார்கள் இருவரின் திருமணத்தைக் குறித்து எழுதினேன். அந்த இரண்டு திருமணத்தைவிட என் கடைசி தங்கை சில்வியாவின் திருமணத்தை என்னால் மறக்கவே முடியாது. ஏனெனில் நானும், என் தாயும் மிகவும் கஷ்டப்பட்டு தேவ சமூகத்தில் கண்ணீர் விட்டு ஜெபித்து நடந்த ஒன்று. திருமணங்கள் பரலோகில் நிச்சயிக்கப்படும் என்று சொல்வார்கள். உண்மையில், வேதத்தின்படி கர்த்தருக்குச் சித்தமுள்ளது அவர் கைகளினால் வாய்க்கும். சில்வியாவுக்கு அவள் மணக்க போகும் மாப்பிள்ளை பிறக்கும்போதே மருத்துவ மனையிலேயே தேவன் சித்தம் கொண்டார். எப்படி என்று கேட்கிறீர்களா? என் தாயார் என் தங்கையைப் பெற்றெடுக்க (Egmore Maternity) மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அப்போது நான் 8-ஆம் வகுப்பு படித்து முடித்து, 9-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். என் அம்மாவை நான்தான் மருத்துவ மனையில் கொண்டு சேர்த்தேன். காரணம், ஏற்கனவே நாங்கள் மூன்று பெண் பிள்ளைகள் நான்காவது பிறந்ததும் பெண். என் அப்பா ஆண் பிள்ளையை என் அம்மா பெற்றெடுப்பார்கள் என்று நினைத்தார்கள். ஆனால், நான்காவதும் பெண்ணாய் பெற்றெடுத்தார்கள். பெண் பிள்ளை என்பதால் என் அப்பா என் அம்மாவை வந்து கூட பார்க்கவில்லை. அச்சமயம் நான் பள்ளிக்குச் சென்றுவிட்டு, வீட்டிற்கு வந்து அம்மாவுக்கு சமைத்து விட்டு அதை மருத்துவமனைக்கு கொண்டுபோய் கொடுப்பேன். என்னைப் பார்த்து என் தாய் அழுவார்கள், பரிதாபப் படுவார்கள். என் பிள்ளைக்கு எவ்வளவு கஷ்டம் ஆண்டவரே என்று புலம்புவார்கள்.

அப்படி அம்மருத்துவ மனையில் இருந்த நாட்களில் என் தாயின் பக்கத்துப் படுக்கையில் இருந்தவருக்கு ஆண் பிள்ளைப் பிறந்தது. அவர்கள் என் அம்மாவிடம் சகோதரியே, எனக்கு இது மூன்றாவது ஆண் பிள்ளை, உங்களுக்கு நான்காவதும் பெண் பிள்ளை. உங்கள் கணவர் ஆண் பிள்ளைதான் வேண்டும் என்று கேட்கிறார் என்று சொல்கின்றீர்களே, நாம் பிள்ளைகளை மாற்றிக் கொள்ளலாமா என்று (Joke) கேலியாக என் தாயிடம் கேட்டார்களாம். இதை என் அம்மா, இந்த பக்கத்துப் படுக்கையில் உள்ள அம்மா இப்படி கேட்கிறார்கள் சாந்தி, உன் தங்கையை அவர்களிடம் கொடுத்து விட்டு, அந்த ஆண்



பிள்ளையை நாம் எடுத்துக் கொள்ளலாமா என்று என் அம்மாவும் சும்மாதான் என்னிடம் கேட்டார்கள். உடனே எனக்கு ஒரு கோபம் வந்து என்னம்மா பேசுகிறீர்கள், இன்னும் 10 குழந்தைகள் பெண்ணாக இருந்தாலும், அது நம் இரத்தம் என்று கோபமாய் என் அம்மாவிடம் சொன்னேன். உடனே என் அம்மா "காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு", அப்படியெல்லாம் எப்படி செய்வோம் என்று என்னை ஆறுதல் படுத்தினார்கள். ஆனால், அன்று அந்த மருத்துவமனையில் விளையாட்டாய் கேட்ட அதே பையன்தான் என் தங்கை சில்வியாவுக்கு மாப்பிள்ளையானார்.

பிள்ளைகள் இருவரும் வளர்ந்த நாட்களில் என் அம்மாவும், அந்த பையனின் அம்மாவும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களாக பணியாற்றி, நெருங்கின சிநேகிதர்களானார்கள். அப்படி இருக்கும் போது, அன்று பேசிய காரியம் நிறைவேற வேண்டும். சில்வியா, ரூபனுக்கு வேண்டும். என்று திருமதி ராஜேஸ்வரி ஜேக்கப் என் அம்மா ஜெயசீலி பர்னபாஸிடம் கேட்டார்களாம். இன்னாருக்கு, இன்னார் என்று குறித்த தேவன் எப்படியும் இணைக்க வல்லவர். ஆனால், இருவருக்கும் படிப்பை முடிக்கும் தருவாயில் திருமதி ராஜேஸ்வரி ஜேக்கப் ராஜரத்தினம் மரித்துப் போய்விட்டார்கள். அந்த காரியமும் நின்றுப் போனது. திடீரென ஒரு நாள் ரூபனின் பெரிய அண்ணன் ஜோசப், சித்ரா இருவரும் லண்டனில் இருக்கிறார்கள். இவர்கள் என்னிடமும், என் அம்மாவிடமும் வந்து சில்வியாவை எங்கள் தம்பி ரூபனுக்கு கொடுக்க வேண்டும், இது என் தாயின் விருப்பம் என்று சொன்னார்கள். சில்வியா இரண்டு வயது இருக்கும்போதே என் தகப்பனும் மரித்து விட்டார். ஏற்கனவே நானும், என் தாயும் இரண்டு திருமணங்களை கஷ்டப்பட்டு முடித்தோம். அதுவும் அவர்கள் பத்தே நாளில் இத்திருமணத்தை முடித்துவிட்டு, நாங்கள் லண்டனுக்குச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

பத்து நாட்களில் திருமணம் நடத்த வேண்டுமென்றால் எவ்வளவு கடினம் யோசித்துப் பாருங்கள். அன்று நானும், என் அம்மாவும் பட்ட கஷ்டத்திற்கு அளவே இல்லை. அன்று நாங்கள் இரு பெண்கள்தான் முன் நின்று எல்லாவற்றையும் செய்தது போல் இன்று நானும், என் மகள் ஷீபாவும் அத்தனைப் பொறுப்புகளையும் ஜெபத்தினாலும், கர்த்தரின் தயவினாலும் மற்றும் உங்கள் அனைவரின் ஜெபங்களினாலும் அற்புத ஊழியம் நடத்தி வருகிறோம். மாப்பிள்ளையின் அண்ணனும், அண்ணியும் சுலபமாய் சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். ஆனால்

நானும், என் அம்மாவும் சேர்ந்து எடுத்து வைத்த முதல்படி ஜெபம் மட்டுமே. ஆண்டவர் நிச்சயம் நமக்கு உதவி செய்வார் என்று ஆரம்பித்தோம். திருமண அழைப்பிதழை அச்சிடுவதற்குக் கூட எங்களிடம் பணம் இல்லை. இரண்டு நாட்களில் ஏதோ கிடைத்த கொஞ்சம் பணத்தை வைத்து அழைப்பிதழை அனுப்ப வேண்டியவர்களுக்கு அனுப்பினோம். விசேஷமாய் ஊழியர்கள் அநேகரை அழைத்திருந்தேன். அந்த நேரத்தில் என் கணவர் வெளி ஊரில் ஊழியம் செய்துக் கொண்டிருந்தார். அவருடைய நெருங்கிய நண்பர் Bro. சாலமோன் அவர்கள் அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்திருந்தார். அவர் எனக்கு அநேக உதவிகளைச் செய்தார். நாம் நெருக்கத்தின் மத்தியில் ஜெபிக்கும்போது காத்தர் நமக்காக தூதனைப் போல் யாரையாவது அனுப்புவார்.

திருமணம் அடைக்கலநாதர் லுத்தரன் ஆலயத்தில் நடந்தது. அதை மாப்பிள்ளை வீட்டாரே செய்து விட்டார்கள். வரவேற்பு நிகழச்சிக்காக செயின்ட் பால்ஸ் மேல் நிலைப் பள்ளி மைதானத்தை ஒழுங்கு செய்தேன். சாப்பாட்டை ஒரு நபர் நான் செய்து தருகிறேன், திருமணம் முடிந்த பின் நீங்கள் பணம் கொடுத்தால் போதும் என்றார்கள். அவர் செயின்ட் பால்ஸ் பள்ளி ஆசிரியர் அர்த்தனாரி. ஒவ்வொன்றாய் செய்துக் கொண்டிருக்கும்போது பெங்களூரில் மிகப் பெரிய பதவியில் இருந்த சகோதரி எனக்கு போன் செய்தார்கள். அவர்களிடம் என் தங்கை திருமணத்திற்கு நீங்கள் நிச்சயம் வரவேண்டும் என்று அழைத்தேன். அவர்களும் வருகிறேன் என்று சொல்லிவிட்டு உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா என்று கேட்டார்கள். உடனே நான் அவர்கள் கேட்டதினால், ஆமாம் என்கது கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது உங்களால் முடிந்தால் அனுப்புங்கள், நான் அதை திருப்பித் தருகிறேன் என்று சொன்னேன். அவர்கள் சொன்னார்கள் நான் ரூ.50,000 நாளைக்கே அனுப்புகிறேன். நீங்கள் கவலைப் படாதீர்கள் என்று சொன்னார்கள். எனக்கும், என் அம்மாவுக்கும் அதிக சந்தோஷம். அம்மா, பயப்படா தீர்கள் நாம் இந்த திருமணத்தை முடித்து விடலாம். கர்ததர் நமக்காக எல்லாவற்றையும் செய்வார் என்று சொன்னேன். அன்று இரவுதான் நாங்கள் நன்றாக உறங்கினோம். காலையில் அவர்கள் சொன்னது போல் ஒரு காசோலை (Cheque) வந்தது. அந்த தொகையை அனுப்பினார்கள். அதை கையில் வாங்கி 2 மணி நேரத்தில் அதே சகோதரி என்னிடம் போன் செய்து சொன்ன வார்த்தை, சகோதரி என்னை மன்னித்து விடுங்கள், நான் அனுப்பின Cheque-ஐ திரும்ப அனுப்பி விடுங்கள்.காரணம், இன்று ஆடிட்டர்கள் வருகிறார்கள். இது என்னுடைய



அலுவலக பணம் Sorry, Sorry என்று திரும்ப, திரும்ப சொன்னார்கள். கதறி, கதறி அழுது கொண்டே - கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பது போல அந்த காசோலை பறந்து போய்விட்டது. கர்த்தர் செய்கிற யாவும் நன்மைக்கே சாந்தி நீ கவலைப்படாதே, ஆரம்பித்த தேவன் அற்புதமாய் முடிக்கச் செய்வார் என்று என் அம்மா என்னை ஆறுதல் படுத்தினார்கள். அதன் பின் குடும்பத்தினரிடமிருந்து சில உதவிகளைப் பெற்று, சரி எப்படியும் திருமணம் நடந்தபின் வரும் பணத்தில் கடனை அடைத்து விடலாம் என்று ஊக்கமாக விசுவாசித்து ஜெபித்துக் கொண்டிருந்தோம்.

திருமண நாளும் வந்தது. 4-11-1992 அன்று காலை இடியுடன் கூடிய மழை வநது விட்டது. வானிலைச் செய்தி 48 மணி நேரம் காற்றுடன் கன மழை என்றார்கள். விடியற்காலை நாங்கள் யாவரும் எழுந்து இயேசுவே, இது என்ன சோதனை எங்களுக்கு யாருமில்லை, நீர்தான் அப்பா உதவி செய்ய வேண்டும் என்று அழுது ஜெபித்தோம். அன்று காலை 6.00 மணி இருக்கும் நான் வீட்டிற்கு வெளியில் போய் ரோட்டில் நெடு முழங்கலில் கொட்டும் மழையில் - ஆண்டவரே, அன்று பாடுள்ள மனுஷன் எலியாவின் ஜெபத்தை கேட்டு மழையை நிறுத்தினவரே, நான் திறந்தவெளி மைதானத்தில் திருமண வரவேற்பு நிகழ்ச்சியை வைத்திருக்கிறேன், மழையை நிறுத்துமப்பா என்று ஜெபித்துவிட்டு உள்ளே வந்தேன். கொஞ்சம் நேரத்தில் மழை நின்றது. அதன்பின் மழையே இல்லை. திருமணம் முடிந்து வரவேற்பு அந்த செயின்ட் பால்ஸ் மைதானத்தில் வைக்க முடியவில்லை, அங்கு அதிக தண்ணீர். பள்ளியில் ஒரு பெரிய ஹால் உள்ளது. அதில் மிக அழகாய் வரவேற்பு நிகழ்ச்சியை நடத்தினோம். அன்று மழையில் நனைந்ததால் என்னால் பேசக் கூட முடியவில்லை. திருமணம் முடித்து அத்தனை கடனையும் கொடுக்க வேண்டுமே என்று என் இருதயம் பதைத்தது. உள்ளுக்குள்ளேயே ஜெபித்துக் கொண்டே இருந்தேன். ஆசீர்வாதமாக திருமணம் முடிந்தது. அதில் காலம் சென்ற அன்பு சகோதரர் சாம் ஜெபதுரை ஐயா அவர்களும், சகோதரர் அருள்ராஜ் ஐயா அவர்களும் கலந்துக் கொண்டு வாழ்த்துச் செய்தி அளித்தார்கள். திருமணம் முடிந்து எல்லோரும் நல்ல ஒரு ஆகாரத்தை உட்கொண்டு வீடு திரும்பினார்கள். சரியாக 10 மணிக்கு மறுபடியுமாய் மழை ஆரம்பித்து 3 நாட்கள் தொடர்ந்து பெய்தது. சகோதரர் சாம் ஜெபதுரை ஐயா அவர்கள் என்னிடம் ஏன்? சகோதரி 10 மணி வரைதான் மழையை நிறுத்த ஜெபித் தீர்களா என்று கேட்டார்கள். கர்த்தர் பெரியவர் பெரிய காரியத்தைச்